# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2037 - 2017 සැප්තැම්බර් මස 15 වැනි සිකුරාදා - 2017.09.15

*2037 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1544 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1545 |


**கவனிக்க.-** (i) மாநகர சபைகள் (திருத்தம்) சட்டமூலம் 2017, செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) நகர சபைகள் (திருத்தம்) சட்டமூலம் 2017, செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) பிரதேச சபைகள் (திருத்தம்) சட்டமூலம் 2017, செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1541 - B81207 - 5,403 (2017/09)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நிதி ஆணைக்குழு

### தரம் III இற்கான சாரதி பதவிகள் நான்கிற்கு விண்ணப்பம் கோரல்

நிதி ஆணைக்குழுவின் ஆரம்ப மட்டம் தேர்ச்சிபெற்ற சேவை வகையின் தரம் III இற்கான 4 சாரதி பதவிகளின் பொருட்டு பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிதி ஆணைக்குழுவின் ஆரம்ப மட்டத்தில் தேர்ச்சிபெற்ற தொகுதியின் தரம் III இன் சாரதி பதவிகளின் பொருட்டு திறந்த அடிப்படையில் தகைமையுள்ளவர்களை தெரிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2017.09.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக் கூடிய வகையில் "செயலாளர், நிதி ஆணைக்குழு, இலக்கம் 48, வஜிர வீதி, கொழும்பு 04" என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இணைந்த சாரதி சேவையின் தரம் III சாரதி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" என்று தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்ப இறுதித் திகதியின் பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- பொதுவான நேர்முகப் பரீட்சை மற்றும் தொழில்சார் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைவாக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளை நிலவும் வெற்றிடங்களின் பொருட்டு நியமனம் செய்யப்படும்.

2. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானது. எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்தால் மேற்கொள்கின்ற தீர்மானங்களுக்கமைவாக ஓய்வூதியம் வழங்கப்படும்.

3. **சம்பள அளவுத் திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 3/ 2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின்படி ஆரம்ப மட்டத்தின் தேர்ச்சி பெற்ற வகையின் தரம் III இற்கு ஏற்புடையதான மாதச் சம்பளம் PL - 3 - 2016 - ரூபா 25,790 - 10 x 270 - 10 x 300 - 10 x 330 - 12 x 350 - ரூபா 38,990 ஆகும்.

4. **கல்வித் தகைமைகள்** :

4.1 கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு சிங்களம்/ தமிழ் உட்பட இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல்.

5. **தொழில்சார் தகைமைகள்** :

(i) தனியார் அல்லது வாடகை வாகனங்கள் மற்றும் வெற்று எடை 24 அந்தருக்குக் குறைவான ஸ்ரேசன் வெகன் வாகனங்களைச் செலுத்துதல் தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனத்தைச் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றிருத்தல்.

(ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தினத்திற்கு மூன்று (03) வருடங்களுக்கு முன்னர் குறைந்த பட்சம் சீ மற்றும் சீ 1 வாகன வகுப்பிற்குரிய அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்திற்கமைய பி வகுப்பிற்குரிய அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்)

(ii) பெருந்தெருக்கள் சட்டக்கோவை தொடர்பாக போதிய அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. **அனுபவம்**.- வாகன சாரதியாக மூன்று (03) வருட அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும். (அனுபவத்தினை சான்றிதழ்களின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்)

7. **உடற்றகைமைகள்**.- ஆகக்குறைந்தது உயரம் 05 அடி இருத்தல் வேண்டும்.

8. **வயதெல்லை**.- 2017.09.30 ஆந் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

9. **ஏனைய தகைமைகள்** :

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நல்லொழுக்கத்துடனும் சிறந்த ஆரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(இ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்கு ஏற்புடையதான அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியில் அல்லது அதற்கு முன்னராக பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

10. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் பேரில் விண்ணப்பதாரிகளின் அடிப்படைத் தகைமைகளைப் பரிசோதிப்பதற்காக நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன், அத்திகதியிலேயே தொழில்சார் தகைமைப் பரீட்சையும் நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சையிலும் தொழில்சார் தகைமைப் பரீட்சையிலும் விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் திறமையின் ஒழுங்கு முறையினை கட்டாயமாக பின்பற்றி, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளை இணைந்த சாரதிகள் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்யப்படும்.

11. விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும்.

தகைமைகளைப் பரிசீலனை செய்யும்போது எவரேனுமொரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் என தெரிய வந்தால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரிகளால் சமர்ப்பிக்கப்படும் தகவல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொய்யானதென அறியவந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

12. விண்ணப்பதாரிகளின் ஆளடையாளத்தை உறுதிப் படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டை நேர்முகப் பரீட்சைச் சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

13. தாபன விதிக்கோவை, அரசாங்க சேவை ஆணைக்குழு வின் நடைமுறை விதிகள், அவ்வப்போது அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் நிதி ஆணைக்குழுவின் உள்ளக சுற்றுநிருபங்களும் ஏற்புடையதாகும்.

14. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும். எல்லா விண்ணப்பதாரிகளும் இவ்வறி வித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்டங்கள் விதிகளின் பிரகாரம் செயலாற்றுவதற்கு ஒழுங்கமைதல் வேண்டும்.

ஏ. ரீ. எம். யு. டி. பி. தென்னகோன்,
செயலாளர்.

நிதி ஆணைக்குழு அலுவலகம்,
2017, ஓகத்து 18.

9-287

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

2017.06.21 ஆந் திகதிய 2024/35 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவை பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய, இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவை தரம் III இற்கான பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் 2017, திசெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படுவதுடன், இப்பரீட்சைப் பெறுபேறுகளின்படி திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பரீட்சார்த்திகள், இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் தரம் III இன் பதவிகளுக்காக தெரிவுசெய்யப்படுவார்கள்.

3. நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது வெற்றிடங்கள் எல்லாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

4. **சம்பளம்**.- 2016.02.25 ஆந் திகதிய 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் தரம் III இற்கு ஏற்புடையதான சம்பள வகுதி MN-3-2016 ஆவதுடன் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 ஆவதுடன் அச்சம்பளம் உங்களுக்கு உரித்தாவது 2020.01.01 ஆந் திகதியில் இருந்தாகும். மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கு அமைய நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியில் இருந்து சம்பளம் வழங்கப்படும்.

5. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையது மாகும். இப்பரீட்சையின் ஊடாக இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படும் அலுவலர் களுக்கு உரித்துடைய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் பின்னர் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு அலுவலர் கட்டுப்பட வேண்டும்.

6. **சேவை நிபந்தனைகள்** :

(i) திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் மூன்று (03) ஆண்டுகால நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுவர். அலுவலர்கள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் குறித்த முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் அலுவலரின் வேலை, வருகை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானதாக உள்ளதென திணைக்களத் தலைவர் திருப்தியுறும் பட்சத்தில் மூன்று ஆண்டுகளின் இறுதியில் அது பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிக்கையிட்டதன் பின்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் திருப்தியுறும் பட்சத்தில் குறித்த அலுவலரின் நியமனம் நிரந்தரமாக்கப்படும்.

(ii) முதலாவது நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் ஆகக்குறைந்தது 03 ஆண்டுகாலம் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் சிறப்புக் காரணங்களின் அடிப்படையில் அக்கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் யாரேனும் ஒரு அலுவலரை மாற்ற வேண்டியிருப்பின், நியமன அதிகாரிக்கு அதற்கான உரிமையுமுண்டு.

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2014 மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைக்கு அமைய பதவியில் இணைந்து 05 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

7. **தகைமைகள்**.- இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பது தொடர்பாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் ஏற்புடையனவாகும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

**குறிப்பு** :

(i) அதற்கமைய 1999.10.16 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1972.10.16 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்தவர்கள் மாத்திரம் இது தொடர்பாக விண்ணப்பிப்பதற்குத் தகுதிபெறுவர்.

(ii) இப்பரீட்சை இத்தடவை மாத்திரம் உச்ச வயதெல்லை 45 வயதாகக் கொள்ளப்படும். இதன் பின்னரான தடவைகளில் உச்ச வயதெல்லை 30 ஆகக் கவனத்தில் கொள்ளப் படும்.

(ஈ) ***கல்வித் தகைமைகள் :***

(i) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மற்றும் கணிதம் மற்றும் வேறு இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

மற்றும்

(ii) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ. த.) பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் சாதாரண ஆங்கிலம் தவிர) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பழைய பாடத்திட்டத்தின்கீழ் 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல் போதுமானதாகும்.

(உ) ***தொழிற்சார் தகைமைகள் :***

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இருந்து நூலகவியல் பற்றிய மூன்று வருடகால டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

அல்லது

(ii) இலங்கை நூலகர் சங்கத்தின் நூலகவியல் பற்றிய மூன்று வருடகால டிப்ளோமா பாடநெறியில் சித்திபெற்றிருத்தல் ;

அல்லது

(iii) நூலக விஞ்ஞானம் தொடர்பாக மேற்குறிப் பிடப்பட்ட (i) அல்லது (ii) ஆம் தகைமையைவிட மேற்பட்டதொரு தகைமையைப் பெற்றிருத்தல் (அதுபோன்ற தகைமைகள் குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள் மற்றும் இலங்கை நூலகர் சங்கம் ஆகியவற்றில் விசாரித்து இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.)

**குறிப்பு** :

(i) சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்கு ஏற்புடையதான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமாகும்.

(ii) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கை யின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரியதான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய தேகாரோக்கியமும் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

8. **பரீட்சை நடைமுறை**.- இப்பரீட்சை மூன்று வினாத்தாள்களைக் கொண்டமைந்திருக்கும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர்

மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| *வினாத்தாள்* | *புள்ளிகள்* | *மணித்தியாலங்கள்* | *சித்தியடையபெற வேண்டிய புள்ளி* |
|---|---|---|---|
| (1) நூலகவியல் | 100 புள்ளிகள் | 3 மணித்தியாலம் | 40% |
| (2) நுண்ணறிவுப் பரீட்சை | 100 புள்ளிகள் | 1 மணித்தியாலம் | 40% |
| (3) பொது அறிவு | 100 புள்ளிகள் | 1 மணித்தியாலம் | 40% |

மேற்படி பாடங்களுக்கு ஏற்புடையதான பாடவிதானம் கீழ்குறிப்பிட்டுள்ளவாறாகும் :-

8.1 ***நூலகவியல்.-***

(1) *நூலகங்களும் நூலகத்துவமும் :*

நூலகங்களும் நூலக வரலாறும், நவீன மற்றும் புராதன உலகத்தின் பிரதான நூலகங்கள் ;

எழுத்துக்கலை மற்றும் புத்தகங்கள் உள்ளடங்கலானதுமான எழுதப்பட்ட ஊடகங்களின் ஆரம்பமும், பரிமாண வளர்ச்சியும் ;

அச்சிடற்றொழில் நுட்பத்தின் ஆரம்பமும் விரிவாக்கமும், நூலக சமூக அபிவிருத்தி விடயங்கள் மீதான செயல் விளைவுகளும் ;

நூல் நிலைய வகைகள் :

*விசேட நூலகங்கள்.-* அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் முதலான நிறுவனங்கள் சார்ந்த நூலகங்கள், ஆராய்ச்சி நூலகங்களின் கட்டமைப்பு, தொழிற்பாடுகள் மற்றும் பணிகள் ;

*கல்விசார் நூலகங்கள்.-* பல்கலைக்கழகங்கள், ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள் சார்ந்த நூல் நிலையங்களின் கட்டமைப்பு, தொழிற்பாடுகள் மற்றும் பணிகள் ;

பாடசாலை நூலகங்கள் ;

பொது நூலகங்கள் ;

பிரிவெனாக்களின் நூலகங்கள் மற்றும் துறவிமட/ சமய நிறுவனங்களின் நூலகங்கள்

நூலகக் குழு.- கட்டமைப்பு, தேவைப்பாடு முக்கியத்துவம் மற்றும் தொழிற்பாடுகள்

நூலக தொழிலுக்குரிய புலமைசார் தொழில் அமைப்புக்கள் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகள்.- தேசிய மற்றும் சர்வதேச (இலங்கை, இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா)

நூல் நிலையக் கட்டடங்கள்.- திட்டமிடல், கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் :

* தற்போதுள்ள கட்டடமொன்றில் நூலகம் ஒன்றைத் தாபித்தல், அமைத்தல் அல்லது மேம்படுத்தல்

நூலகப் பொருட்களைப் பராமரித்தல், பேணிப் பாதுகாத்தல் (conservation) மற்றும் காப்பீடு (preservation)

இடர்களும் (Disasters) இடர் முகாமைத்துவமும் (Disaster management)

(2) *அறிவும் தகவல்களை ஒழுங்கமைத்தலும் :*

நூல்களை வகைப்படுத்தலின் நோக்கங்களும் நன்மைகளும்

இலங்கை நூலகங்களில் கையாளப்படும் பிரதான பகுப்பாக்கத் திட்டங்கள் தூயி தசமதான பகுப்பாக்கத்திட்டங்கள், சர்வதேச தசமதான பகுப்பாக்கத் திட்டம்

நூலக பட்டியலாக்கத்தின் குறிக்கோளும் ஆங்கிலோ அமெரிக்க பட்டியலாக்கல் சட்டக் கோவை (AACR) முறையும்

நூல்களைப் பற்றிய விபரங்கள்

(AACR2) விதிமுறைகளைப் பயன்படுத்தி புள்ளிவிபரப் பட்டியல் தயாரித்தல்

(3) *நூலக வளங்களும் தகவல் சேவையும் :*

பலவகையான நூலக வளங்கள்

சேர்ந்த அபிவிருத்தி, சேர்ந்த அபிவிருத்திக் கொள்கை மற்றும் அதன் முக்கியத்துவம்

நூலக வளங்களைத் தெரிவுசெய்தல் அடங்கலான ஏற்பு செயற்பாடுகள்:-

(i) நூலக வளங்களை தெரிவுசெய்தலின் கோட்பாடுகளும் மூலகங்களும்;

(ii) ஏற்பு செயற்பாடுகள், செயன்முறை உட்பட பல்வகையான தொழில்நுட்பச் சேவைகள்;

(iii) இருப்புக்களை மீளாய்தலும் அகற்றும் செயற்பாடும்;

வெளியீடும் வெளியீட்டு உரிமையும், தடையும்;

நடைமுறை விழிப்புணர்வுச் சேவைகள் (Current Awareness Service);

வாசகர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்;

மக்கள் தொடர்பும் நூலகங்களுக்கான பிரசாரங் களும்.

*(4) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்* (Information Communication Technology)

நூலகங்களில் கணினிகளைப் பயன்படுத்தலும், நூலக நடவடிக்கைகளின்போது தகவல் தொழில் நுட்பத்தின் முக்கியத்துவமும் உற்பத்தித்திறனும்

* மேற்படி 4 துறைகளும் உள்ளடங்கும் வண்ணம் தயாரிக்கப்படும் இது ஒரு கட்டமைக்கப்பட்ட கட்டுரை முறையிலான வினாக்களைக் கொண்ட ஒரு வினாப்பத்திரமாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். காலம் : 3 மணித்தியாலங்கள் ஆகும்.

8.2 (02) ***நுண்ணறிவுத் தேர்வு.-*** சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகிப்பதிலும் அளவிடுவதிலும், காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்து கொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக்கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

* இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். காலம் : 1 மணித்தி யாலம் ஆகும்.

8.3 (03) ***பொது அறிவு.-*** தேசிய, பிராந்திய அத்துடன் அனைத்துலக ரீதியான பல அமைப்புகளைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக, கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதார அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத் துறை மீதான பரீட்சார்த்தியின் பொது அறிவு மற்றும் விழிப்புணர்வைப் பற்றியும் மதிப்பிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

* இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். காலம் : 1 மணித்தி யாலம் ஆகும்.

(நுண்ணறிவுத் தேர்வு மற்றும் பொது அறிவு பற்றிய வினாத்தாள்கள் பரீட்சைத் திணைக்களத்தின் ஆட்சேர்ப்புப் பரீட்சை வகுப்பீட்டின்கீழ் III ஆம் துறைக்கு உரியதாக தயாரிக்கப்படும்.)

நியமனத்திற்கான தகைமைகளைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளி களில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பதையாவது (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் திறந்த போட்டிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்திசெய்கின்றவாறு பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறையைக் கட்டாயமாகக் கடைப்பிடித்து நியமனங்கள் வழங்கப்படும்.

9. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். இக்கட்டணத்தைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003.02.13 இன்கீழ் எந்தவொரு தபால் அலுவலகத்துக்கோ அல்லது உப தபால் அலுவலகத்துக்கோ செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை எதிர்காலத் தேவைக்காக தம்வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) இப்பரீட்சைக் கட்டணங்களுக்கு மேலதிகமாக எந்தவொரு அறவீடும் அறவிடப்பட மாட்டாது என்பது பற்றி தயவுடன் அறியத்தருகிறோம். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளச் செலுத்தப்படாததுடன் காசுக்கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

10. **விண்ணப்பங்கள்**.- ஏ4 (21 x 29 cm) சாதாரண ஹாப்ஷீட் அளவிலான கடதாசியை உபயோகித்து,

(அ) இலக்கம் 1 முதல் 3.5 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ஆ) இலக்கம் 4 முதல் அதனடுத்துவரும் பந்திகள் மறுபக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் கடதாசி யின் இரண்டு பக்கங்களையும் உபயோகப்படுத்தி விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் கருதும் மொழியிலேயே விண்ணப்பம் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தைத் தயார்செய்துகொள்ளும் போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

உரிய மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாதவையும் உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும் சரியாகப் பூர்த்திசெய்யாது முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களும் இன்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யத் தவறுவதால் ஏற்படும் இழப்பிற்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பாளிகளாவார்கள். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதி மற்றும் பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்திசெய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பம் பிழையின்றி பூரணப்படுத்தப்பட்டுள்ளதென்பதற்கும் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தி அதன் விபரங்கள் விண்ணப்பப்படிவத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்பதற்கும் விண்ணப்ப தாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

10.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப் பங்களைச் சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள வயதெல்லைக்குள்ளுள்ள உரிய பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தி விண்ணப்பங் களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் அனைவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தகைமைகளைக் கொண்டுள்ளார்களா என்று பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கவில்லையென அறியவருமிடத்து அவர்களின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படும்.

10.2 விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017" என்று குறிப்பிடவும்.

10.3 விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலரொருவர், ரூபா 2,40,360 வருடாந்த சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய அரசின் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலரொருவர் சான்றுப்படுத்த வேண்டும்.

10.4 முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2017, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. 1503,
கொழும்பு.

11. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பதாரர்களிடம் அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட் டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு கோரும்போது விண்ணப்பதாரி தாம் கோரும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பன சரியாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராக இருப்பின், அவ்விபரங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றைத் துரிதமாகப் பெற்றுக்கொள்ள முடியுமான விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு கோரும்போது, பரீட்சைகத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துமுகமாக தம்வசம் வைத்துள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டின் பிரதி/பரீட்சைக் கட்டணம் செலுத்துவது ஏற்புடையதாயின் அதற்குரிய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை அஞ்சல் செய்தபோது பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு என்பவற்றை ஆயத்தமாக வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். எல்லா விண்ணப்பதாரிகளும் பரீட்சை தொடர்பாக தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திய அனுமதிப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

12. **பரீட்சைப் பெறுபேறு**.- இவ்வறிவித்தலின் 8.3 பந்திக்கு அமைய ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமைக்கேற்ப தயாரிக்கப்பட்ட பெறுபேறு

அட்டவணை இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்புவதற்கு அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத் தளத்தில் பிரசுரிப்பதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்ப தற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை மட்டும் பரீட்சை மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

14. **பொய்யான தகவல்களுக்கு தண்டனை**.- விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்திசெய்யும்போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி யொருவர் தகைமையற்றவர் எனத் தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச்செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப் படலாம்.

15. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்ட னைக்கு ஆளாதல் வேண்டும்.

16. இப்பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும் இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அதுபற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். பரீட்சார்த்திகள் யாவரும் இவ்வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள பொது பரீட்சை சட்டதிட்டங்களின்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்கு உட்படுவர்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2017, ஓகத்து 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF SRI LANKA GOVERNMENT LIBRARIANS' SERVICE - 2017

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
ஆங்கிலம் - 4

(சரியான இலக்கத்தைக் கூட்டினுள் தெளிவாகக் குறிப்பிடவும்)

1. 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக எழுதி முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----. *உதாரணம்* : GUNAWARDHANA, M.G.B.S.K.)

1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. 3.1 பால் : பெண் - 1
ஆண் - 0 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

3.2 தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.3 பிறந்த திகதி :

ஆண்டு: [ | | | ] மாதம்: [ | ] திகதி: [ | ]

3.4 2017.10.16 ஆந் திகதிக்கு வயது :-

வருடங்கள்: [ | ] மாதங்கள்: [ | ] நாட்கள்: [ | ]

3.5 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரங்கள்

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

4.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

4.3 பரீட்சை அறிவிப்பில் 7.0 பந்தி (உ) பிரகாரம் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக நீங்கள் நூலகவியல் தொடர்பாக பெற்றுள்ள மூன்று வருடகால டிப்ளோமா தகைமை தொடர்பான விபரங்கள் :

(i) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
(ii) டிப்ளோமா/ பட்டம் :----.
(iii) டிப்ளோமா/ பட்டம் பெற்ற ஆண்டு :----.

5. வேறு தகைமைகள் :--------------------------------
-------------------------------------------------------
-------------------------------------------------------.

6. நீங்கள் எப்பொழுதாவது எத்தகையதுமான ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளி யாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடவும்.)

ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும் :----.

7. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :-

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/ உப தபால் அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய பணம் :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற்பட பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்ளவும்.) |

8. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் வழங்கியுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டியவரையில் உண்மை யானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யாதிருத்தல் மற்றும்/ அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகப் பூர்த்திசெய்திருத்தல் ஆகியவற்றின் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகிறேன். மேலும் இங்கு அனைத்துப் பகுதிகளையும் சரியாகப் பூர்த்திசெய்துள்ளேன் எனவும் வெளிப் படுத்துகிறேன்.

(ஆ) என்னால் தரப்பட்ட தகவல்கள் பொய்யானவை எனத் தெரிய வந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ......................... ஆந் திகதியில் வைத்தார் என்றும்,

உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்
முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
திகதி :----.

*9-421*

---

## இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017

2017.06.21 ஆந் திகதிய 2024/ 35 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவை பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய, இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையொன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2017, திசெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இப்பரீட்சை பெறுபேறுகளின்படி திறமையின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பரீட்சார்த்திகள், இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் தரம் III இன் பதவிகளுக்கு நியமிப்பதற்காக தெரிவுசெய்யப்படுவார்கள். மேலும் நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் நடைமுறைப்படும் திகதியும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அல்லது வெற்றிடங்கள் எல்லாவற்றையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3. **சம்பளம்**.- அளவுத் திட்டம் 2016.02.25 ஆந் திகதிய 3-2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் தரம் III இற்கு ஏற்புடையதான சம்பள வகுதி MN-3-2016 ஆவதுடன் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 ஆவதுடன் அச்சம்பளம் உங்களுக்கு உரித்தாவது 2020.01.01 ஆந் திகதியில் இருந்தாகும். மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கு அமைய நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியில் இருந்து சம்பளம் வழங்கப்படும்.

**குறிப்பு**.- நியமனம் பெறும் காலத்தில் நடைமுறையில் இருக்கும் சம்பள ஏற்ற ஒழுங்குவிதிகளின்கீழ் சம்பள ஏற்றச் சலுகைகள் வழங்கப்படும்.

4. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

5. **சேவை நிபந்தனைகள் :**

(i) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் பேரில் இலங்கை அரச நூலகர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படும் அலுவலரொருவர் நியமனத் திகதியில் இருந்து ஒரு வருடகால பதிற்கடமையாற்றும் வேலைக்காலத்திற்கு உட்படுவர். அவ்வாறு பதிற் கடமையாற்றும் வேலைக்காலத்தில் வேலை வரவு மற்றும் நடத்தை திருப்திகரமானதென திணைக்களத் தலைவர் திருப்தியுறுவாராயின் குறித்த அலுவலரின் நியமனம் நிரந்தரமாக்கப்படும். எனினும், அவர்கள் நியமனத் திகதியில் இருந்து மூன்று (03) ஆண்டு காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

(ii) முதலாவது நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் ஆகக்குறைந்தது 03 ஆண்டுகாலம் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் சிறப்புக் காரணங்களின் அடிப்படையில் அக்கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் யாரேனும் ஒரு அலுவலரை மாற்ற வேண்டியிருப்பின், நியமன அதிகாரிக்கு அதற்கான உரிமையுமுண்டு.

(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/ 2014 மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நியமனம் பெற்று 05 வருடங்கள் கடந்து செல்ல முன் உரிய இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **தகைமைகள்**.- இப்பரீட்சையில் போட்டியிடுவதற்கு தகைமை பெறும் பொருட்டு ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :-

*6.1* ***கல்வித் தகைமைகள் :***

(அ) கல்விப் பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாது ஆகக்குறைந்தது, இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6.2 ***தொழிற் தகைமைகள் :***

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நூலகவியல் தொடர்பான மூன்றாண்டு கால டிப்ளோமா பாடநெறியின் முதலாம் ஆண்டில் சித்திபெற்றிருத்தல் ;

அல்லது

(ஆ) இலங்கை நூலகர் சங்கத்தின் நூலகவியல் பற்றிய மூன்று வருடகால டிப்ளோமா பாடநெறியில் முதலாம் ஆண்டில் சித்திபெற்றிருத்தல்.

6.3 ***அனுபவம் :***

(அ) அரசாங்க சேவையின் திணைக்கள ரீதியான ஆரம்பத் தேர்ச்சியின்றிய (PL-01) சேவை வகுதியின் நூலக உதவியாளர்/ நூலக ஊழியர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் அப்பதவியில் 10 வருட முனைப்பான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் ;

(ஆ) மேலே 6.2 இன் (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள டிப்ளோமா பாடநெறிகளில் ஒன்றையேனும் பூர்த்திசெய்து, டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பின், அப்பரீட்சார்த்திகளுக்கு அரசாங்க சேவையின் திணைக்கள ரீதியான ஆரம்பத் தேர்ச்சியின்றி (PL-01) சேவை வகுதியின் நூலக உதவியாளர்/ நூலக ஊழியர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியன்று அப்பதவியில் உடன்முன்னரான 5 ஆண்டுகால முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.

(இது தொடர்பாக உச்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது).

**குறிப்பு :**

(i) சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்கு ஏற்புடையதான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமாகும் ;

(ii) மேற்படி பந்தி 6.3 (அ) மற்றும் (ஆ) பந்திக்கமைய கீழே (அ), (ஆ) வில் குறிப்பிட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்துள்ளவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகைமையுடையவர்களாகக் கருதப்படுவர் :

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 05 வருட காலத்திற்குள் உரிய சம்பள ஏற்றங்கள் முழுவதையும் ஈட்டியிருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முற்பட்ட 05 வருட காலத்திற்குள் எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகாது இருத்தல் (எச்சரிக்கை தவிர்ந்த) இரண்டும்.

(iii) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றவும், பதவியில் கடமையாற்றவும் தேவையான உடல் உளத் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் ;

(iv) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(v) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று அரசாங்க சேவையில் நிரந்தர நியமனமொன்றில் ஆகக் குறைந்தது உடன்முன்னரான ஐந்தாண்டு கால (5) திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். அத்துடன் அதுபற்றி திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

7. **பரீட்சை நடைமுறை**.- இப்பரீட்சை மூன்று வினாத்தாள்களைக் கொண்டமைந்திருக்கும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| *பாடம்* | *புள்ளிகள்* | *நேரம்* | *சித்தியடைய பெற வேண்டிய புள்ளி* |
|---|---|---|---|
| நூலகவியல் | 100 புள்ளிகள் | 3 மணித்தியாலம் | 40% |
| நுண்ணறிவுப் பரீட்சை | 100 புள்ளிகள் | 1 மணித்தியாலம் | 40% |
| பொது அறிவு | 100 புள்ளிகள் | 1 மணித்தியாலம் | 40% |

மேற்படி பாடங்களுக்கு ஏற்புடையதான பாடவிதானம் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு அமையும் :-

7.1 (1) ***நூலகவியல்.*** - (1) நூலகங்களும் நூலகத்துவமும் :

நூலகங்களும் நூலக வரலாறும்

நூலகங்களின் அங்கத்தவர்களின் தொழிற்பாடு

நூல்கள் மற்றும் பல்வேறு ஆவணங்கள் மற்றும் ஆவணங்கள், அச்சிடப்படாத ஊடகங்களின் ஆரம்பம் மற்றும் ஒலி/ ஒளிபரப்பு

கற்றறிந்த தொழிற்சங்கங்கள்

இலங்கை நூலகச் சங்கம்

அமெரிக்கா மற்றும் பிரித்தானிய நூலகச் சங்கங்கள்

நூல் நிலைய வகைகள் :

பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவன நூலகங்கள் ;

அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நூலகங்கள் ;

பொது நூலகங்கள்.

நூலகக் குழுக்கள் :

பேணிப் பாதுகாத்தலும் (conservation) காப்பீடும் (preservation)

(2) ***அறிவும் தகவல் ஒழுங்கமைப்பும் :***

நூல்களை வகைப்படுத்தலின் நோக்கங்களும் அதன் நன்மைகளும்

நூல் வகைப்படுத்தல் மற்றும் அதன் குறிக்கோள்கள், பயன்பாடுகள்

துயி தசமதான பகுப்பாக்கத் திட்டம்

பட்டியலாக்கமும் அதன் நோக்கங்களும்

(AACR2) பட்டியலாக்கச் சட்டக்கோவை

பதிவுகளும் நூல்களைப் பற்றிய விபரங்களும்

பட்டியலாக்கத்தின் வகைகள்

(3) ***நூலக வளங்களும் தகவல் சேவையும் :***

பல்லின நூலக வளங்கள்

நூலக வளங்களைத் தெரிவுசெய்தலும் தெரிவுசெய்யும் செயற்பாடும்

ஏற்பும் ஏற்புச் செயற்பாடுகளும்

தளக்கோளவமைப்பு

இருப்பு மீளாய்வும் அகற்றல் செயற்பாடும்

(4) ***தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்*** (Information Communication Technology)

நூல் நிலையங்கள் மீதான கணினித் தொழில்நுட்பத்தின் செயல்விளைவுகள் :

* காலம் : 3 மணித்தியாலம்.

7.2 (02) ***நுண்ணறிவுத் தேர்வு.*** - சொற்கள், எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் சிக்கலான வினாக்கள் தொடர்பிலான பரீட்சார்த்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகிப்பதிலும் அளவிடுவதிலும், காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்து கொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்திக்கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

* இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். காலம் : 1 மணித்தியாலம் ஆகும்.

7.3 (03) ***பொது அறிவு.*** - தேசிய, பிராந்திய அத்துடன் அனைத்துலக ரீதியான பல அமைப்புகளைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக, கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதார அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத் துறை மீதான பரீட்சார்த்தியின் பொது அறிவு மற்றும் விழிப்புணர்வை பற்றியும் மதிப்பிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

* இது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் மாதிரியான 50 வினாக்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். காலம் : 1 மணித்தியாலம் ஆகும்.

(நுண்ணறிவுத் தேர்வு மற்றும் பொது அறிவு பற்றிய வினாத்தாள்கள் பரீட்சைத் திணைக்களத்தின் ஆட்சேர்ப்புப் பரீட்சை வகுப்பீட்டின்கீழ் III ஆம் துறைக்கு உரியதாக தயாரிக்கப்படும்.)

நியமனத்திற்கான தகைமைகளைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பதை யாவது (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றி டங்களின் எண்ணிக்கையைப் பூர்த்திசெய்கின்றவாறு பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்குமுறையை கட்டாயமாகக் கடைப்பிடித்து நியமனங்கள் வழங்கப்படும்.

8. ***பரீட்சைக் கட்டணம்.*** - பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். இக்கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003.02.13 இன்கீழ் எந்தவொரு தபால் அலுவலகத்துக்கோ அல்லது உப தபால் அலுவலகத்துக்கோ செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில்

உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தம்வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) இப்பரீட்சைக் கட்டணங்களுக்கு மேலதிகமாக எந்தவொரு அறவீடும் அறவிடப்பட மாட்டாது என்பது பற்றி தயவுடன் அறியத்தருகிறோம். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளச் செலுத்தப்படாததுடன் காசுக்கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **விண்ணப்பங்கள்**.- ஏ4 (21 x 29 cm) (சாதாரண ஹாப்ஷீட்) அளவிலான கடதாசியை உபயோகித்து,

(அ) இலக்கம் 1 முதல் 3.4 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ஆ) இலக்கம் 4 முதல் அதனடுத்துவரும் பந்திகள் மறுபக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் கடதாசியின் இரண்டு பக்கங்களையும் உபயோகப்படுத்தி விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கருதும் மொழியிலேயே விண்ணப்பம் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தைத் தயார்செய்து கொள்ளும் போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9.1 உரிய மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாதவையும் முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களும் இன்றி நிராகரிக்கப்படுவதனால், விண்ணப்பத்தை அனுப்புவதற்கு முன்னர் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கவும், அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டு, விண்ணப்பம் சரியாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா என்பது பற்றியும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அது விண்ணப்பத்தில் குறிக்கப்பட்டு, பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் விண்ணப்ப தாரர்கள் நன்கு கவனித்தல் வேண்டும். மேலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யப்படாதவிடத்து அதற்கான பொறுப்பினை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

9.2 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப் பங்களைச் சமர்ப்பித்திருப்பார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி, விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னரோ செலுத்தி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகள் அனைவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமை பரீட்சார்த்தி இப்பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது. பரீட்சார்த் திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தகைமைகளைக் கொண்டுள்ளார்களா என்று பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளைக் கொண்டி ருக்கவில்லையென அறியவருமிடத்து அவர்களின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படும்.

9.3 விண்ணப்பங்களை வைத்து அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017" என்று குறிப்பிடவும்.

9.4 ***பரீட்சைப் பெறுபேறு***.- இவ்வறிவித்தலின் 6.3 பந்திக்கு அமைய ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமைக்கேற்ப தயாரிக்கப்பட்ட பெறுபேறு அட்டவணை இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்புவதற்கு அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

10. முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2017, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அது தொடர்பாகத் தத்தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவருக்கு முன்னமே சமர்ப்பிக்கும்படி விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

11. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பதாரர்களிடம் அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக

குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்றை இலங்கை பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு கோரும்போது விண்ணப்பதாரி தாம் கோரும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பன சரியாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராக இருப்பின், அவ்விபரங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றைத் துரிதமாகப் பெற்றுக்கொள்ள முடியுமான விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு கோரும்போது, பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துமுகமாக தம்வசம் வைத்துள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டின் பிரதி/பரீட்சைக் கட்டணம் செலுத்துவது ஏற்புடையதாயின் அதற்குரிய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை அஞ்சல் செய்தபோது பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு என்பவற்றை ஆயத்தமாக வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

12. இந்நியமனத்துக்கு பரீட்சார்த்தி தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவரை விடுவிப்பதற்கு திணைக்களத் தலைவர் சம்மதம் தெரிவித்தல் வேண்டும். விண்ணப்பத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள விதத்திலான சான்றிதழொன்றை திணைக்களத் தலைவர் வழங்க வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வகையில் திணைக்களத் தலைவர்கள் அவர்களுக்கு கடமை லீவு வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் செலுத்தப்பட மாட்டாது.

12.1 ***கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.***- விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் பரீட்சார்த்தியின் கையொப்பம் திணைக்களத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

12.2 எல்லா விண்ணப்பதாரிகளும் பரீட்சை தொடர்பாக தோற்றும் முதல் நாளிலேயே பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திய அனுமதிப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

13. அனைத்து அலுவலர்களும் பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது தினத்திலேயே பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

14. **பொய்யான தகவல்களுக்குத் தண்டனை.**- விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்திசெய்யும்போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் எனத் தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச்செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப் படலாம்.

15. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் வேறாக அச்சிடப்பட்டுள்ளது. அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

16. இப்பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படுமாயின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும் இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அதுபற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுப் பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுப்பது குறித்து இணங்கியொழுகுதல் வேண்டும்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக, மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2017, ஒகத்து 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017**

LIMITED COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF SRI LANKA GOVERNMENT LIBRARIANS' SERVICE - 2017

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் தெளிவாக எழுதவும்)

1. 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

*உதாரணம்* : GUNAWARDHANA, M.G.B.S.K.)

1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : --.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. 2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. 3.1 பால் : பெண் - 1
ஆண் - 0
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

3.2 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

3.3 பிறந்த திகதி :

ஆண்டு: மாதம்: திகதி:

3.4 தொலைபேசி இலக்கம் :

4. சேவை விபரங்கள் :

4.1 நீங்கள் தற்போது சேவையாற்றும் திணைக்களத்தின் பெயர் :----.

4.2 தற்போது வகிக்கும் பதவிப் பெயர் :----.

4.3 தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

4.4 தற்போது வகிக்கும் பதவியில் சேவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா ? :----.

4.5 நிரந்தரமாக்கப்பட்டிருந்தால், உறுதிப்படுத்துவதற்கு தகைமையடைந்த திகதி :----.

4.6 தற்போதைய பதவியின் சேவையை உறுதிப்படுத்தி வழங்கப்பட்ட கடிதத்தின் தொடர் இலக்கமும் திகதியும் :----.

5. கல்வித் தகைமைகள்.- பரீட்சை அறிவிப்பில் 6.2(அ) மற்றும் (ஆ) பந்திகளின் பிரகாரம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தகைமை பெறுவதற்கு நீங்கள் முதலாம் ஆண்டு சித்தி பெற்றுள்ள மூன்று வருட கால டிப்ளோமா பாடநெறி தொடர்பான விடயங்கள் :

(i) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.

(ii) டிப்ளோமா பாடநெறியின் பெயர் :----.

(iii) முதலாம் ஆண்டு சித்தியடைந்த திகதி :----.

6. பரீட்சைக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால்/உப தபால் அலுவலகம் :----.

(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.

(iii) செலுத்திய தொகை :----.

பற்றுச்சீட்டு பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டப்படுதல் வேண்டும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்ளவும்.)

7. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் வழங்கியுள்ள விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனு மொரு பகுதி பூர்த்திசெய்யாதிருத்தல் மற்றும்/ அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகப் பூர்த்திசெய்திருத்தல் ஆகியவற்றின் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை

நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகிறேன். மேலும் இங்கு அனைத்துப் பகுதிகளையும் சரியாகப் பூர்த்திசெய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானது எனத் தெரிய வந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................... என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ......................... ஆந் திகதியில் வைத்தார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரது கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
திகதி :----.

9. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

(i) இவ்விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி .................................... இத்திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் ;

(ii) அவர் அரசாங்க நூலக உதவியாளர்/ நூலக ஊழியர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன், அப்பதவியில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு உடன் முன்னர் 5 அல்லது 10 வருட முனைப்பான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ளார் என்றும் ;

(iii) நூலக உதவியாளர்/ நூலக ஊழியர் பதவியில் உறுதிப்படுத்தி அவருக்கு கடிதம் வழங்கப்பட் டுள்ளதென்றும் ;

(iv) அவர், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன் குறைந்தபட்சம் 5 வருட காலம் தொடர்ந்தும் திருப்திகரமாகவும் சேவையாற்றியுள்ளார் என்றும் ;

(v) அவரின் வேலை மற்றும் நடத்தையின்படி விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலத்திற்குள் எதுவித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும் ;

(vi) அவர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 5 வருட காலத்திற்குள் கிடைக்க வேண்டிய சம்பள ஏற்றங்கள் முழுவதையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்றும் ;

(vii) இப்பரீட்சைப் பெறுபேறுகளின் பேரில் நியமனத்திற்காகத் தெரிவுசெய்யப்பட்டால் அவர் வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் ;

(viii) அவரின் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் இத்திணைக்களத்திலுள்ள ஆவணங் களுடன் பொருத்தமாக உள்ளன என்றும், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள ஒழுங்கு விதிகளின்படி அவர் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர் என்றும்

இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**குறிப்பு :**

* திணைக்களத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாகக் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக் கப்பட்ட பதவிநிலை அலுவலரொருவரால் மட்டும் இச்சான்றிதழ் கையொப்பமிடப்படல் வேண்டும். சான்றுப்படுத்தும் அலுவலர் விண்ணப்பத்தில் உள்ளடங்கும் விடயங்கள் எல்லா அம்சங்களிலும் சரியானது என்பதில் திருப்தியுறுதல் வேண்டும்.

* தகைமைக்குரிய தேவைகள் எல்லாவற்றையும் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவர்களின் விண்ணப்பங்களைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படலாகாது.

9-422

---

திருத்தம்

**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைக்குழு**

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

**இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் ஆரம்பத் தர ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2017**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி 2017, யூலை மாதம் 07 ஆந் திகதிய 2027 ஆம் இலக்க அறிவித்தலுக்கு அமைய, இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் ஆரம்பத்தர ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்தல் தொடர்பானது.

2. மேற்படி வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய இலங்கை ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்புக்கு முழுமையான தகைமைகளை அடையவேண்டிய திகதி 2017.09.15 ஆந் திகதி வரையும், விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய திகதி 2017.09.29 ஆந் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

3. அந்த வர்த்தமானியின் ஏனைய விபரங்களில் மாற்றமில்லை.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைக்குழுவினது கட்டளையின்படி,

ஜனக சுகததாச,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
2017, செத்தெம்பர் 06.

9-514

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.